TC.135

**070/DD/19**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS
# TAMIL NADU MARITIME BOARD TEST – HIGHER GRADE

(With Books)

Maximum Time : 2.30 hours — Maximum Marks : 100

## *IMPORTANT INSTRUCTIONS*

## DESCRIPTIVE TYPE
விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

**Answer any six questions each carry 4 marks.** **(6 × 4 = 24)**

ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க ஒவ்வொன்றிற்கும் 4 மதிப்பெண்கள்.

1. Write the format of Marine Protests Register followed in Tamil Nadu Maritime Board.

   தமிழ்நாடு கடல்சார் வாரியத்தில் பின்பற்றப்படும் கடற்சேத எதிர்ப்பு உறுதிமொழி பதிவேட்டின் வடிவத்தை குறிப்பிடுக.

2. Discuss the implications of Hoisting unlawful colours in port under Indian Ports Act 1908.

   இந்திய துறைமுகச் சட்டம் 1908ன்படி, துறைமுகத்தில் சட்டத்திற்குப் புறம்பான நிறங்களில் மேலேற்றும் கொடிகள் உள்ளடக்கிய பொருள் குறித்து விவாதிக்க.

3. Discuss the refund of over charges, as per Tamil Nadu Maritime Board Act 1995.

   தமிழ்நாடு கடல்சார் வாரிய சட்டம் 1995ன்படி, அதிக கட்டணத்தை திரும்ப செலுத்துதல் குறித்து விவாதிக்க.

4. Define (a) Port Facility (b) Recognised Security Organisation, as per Merchant Shipping Act 1958.

   வணிக கப்பல்கள் சட்டம் 1958ன்படி பின்வருவனவற்றை வரையறு (அ) துறைமுக வசதி (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு அமைப்பு.

5. Define (a) Steam Vessel (b) Motor Vessel as per Tamil Nadu Minor Port Harbour Craft Rules 1953.

   தமிழ்நாடு சிறு துறைமுக மரக்கல விதிகள் 1953ன்படி பின்வருவனவற்றை வரையறு (அ) நீராவிக் கப்பல் (ஆ) இயந்திரக் கப்பல்.

6. Meaning of Flag Signal (a) "Q" (b) "QQ" (c) "QL" (d) Red Light Over White Light.

   (அ) "Q" (ஆ) "QQ" (இ) "QL" (ஈ) வெள்ளை விளக்கு மேல் சிவப்பு விளக்கு ஆகிய கொடி சமிக்ஞைக்கான பொருள் குறிப்பிடுக.

7. Which are the ships exempted from paying light dues as per Light House Act 1927.

கலங்கரை விளக்கச் சட்டம் 1927ன்படி, எந்தெந்தக் கப்பல்களுக்கு ஒளி கட்டணம் செலுத்துதலில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

8. How many systems of storm warnings are there in ports? Explain in brief.

துறைமுகங்களில் புயல் எச்சரிக்கைக்கான எத்தனை அமைப்புகள் உள்ளன. விவரமாக விளக்குக.

**Answer any six questions each carry 6 marks : (6 × 6 = 36)**

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க ஒவ்வொன்றிற்கும் 6 மதிப்பெண்கள் :**

9. Discuss the following in Tamil Nadu Maritime Board "Conduct of Enquiry & Findings".

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தில் பின்வருவனவற்றை விளக்குக.

விசாரணை நடத்தும் முறை மற்றும் கண்டுபிடிப்புகள்.

10. What are the duties of Shipping Masters under Merchant Shipping Act 1958.

வணிக கப்பல் சட்டம் 1958ன்படி கப்பல் போக்குவரத்து முதல்வர்களின் கடமைகள் என்னென்ன?

11. Write the contents of Fortnightly Indian Notices to Mariners.

மாலுமிகள்/கடலோடிகளுக்கான இருவார இந்திய அறிவிப்புகளில் என்னென்ன கூறுகள் உள்ளடங்கியுள்ளன?

12. Mention the procedures of maintenance of Accounts and Audit in Tamil Nadu Maritime Board.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தில் கணக்குகள் மற்றும் தணிக்கையில் பராமரிக்கப்படும் முறைகளை குறிப்பிடுக.

13. Draw the Usual Characters described in the combined Cardinal and Lateral System.

ஒருங்கிணைந்த கார்டினல் மற்றும் பக்கவாட்டு அமைப்பு குறித்து வழக்கமான தன்மைகளை விவரித்து வரைக.

14. Mention the responsibilities of a Ship Agent when a vessel is in a Port.

கப்பல் துறைமுகத்தில் இருக்கும் போது, கப்பல் முகவரின் பொறுப்புகளை குறிப்பிடுக.

15. Write the Shapes and Specifications of Night Signals mentioned in the Code of Storm Warnings.

புயல் எச்சரிக்கை குறியீட்டின்படி, இரவு சமிக்ஞைகளின் வடிவங்கள் மற்றும் குறிப்புகளை எழுதுக.

**Answer any FOUR questions each carry 10 marks :** **(4 × 10 = 40)**

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க ஒவ்வொன்றிற்கும் 10 மதிப்பெண்கள் :**

16. Prepare a Harbour Craft Licence with sample entries for a Harbour Craft, seen in any one the minor port in Tamil Nadu.

தமிழ்நாட்டின் ஏதாவது சிறுதுறைமுகங்களில் தாங்கள் கண்ட துறைமுக மரக்கல உரிமத்தினை மாதிரி பதிவுகளுடன் தயாரிக்க.

17. Cyclone Diagram – Mention and Explain the Signals Hoisted at various stages.

சூறாவளி வரைபடம் – சமிக்ஞைகள் உயர்த்தப்பட்ட பல்வேறு நிலைகளில் குறிப்பிட்டு மற்றும் விவரிக்க.

18. A Ship has polluted oil within Cuddalore Ports. Invoking the provisions of Merchant Shipping Act 1958, mention the penalties to be levied for the vessel.

கடலூர் துறைமுக எல்லைக்குள் ஒரு கப்பல் எண்ணெய் மாசுபாட்டினை ஏற்படுத்தியது. வணிகக் கப்பல் சட்டம் 1958 ன் படி, கப்பலுக்கு விதிக்கப்படும் அபராதத்தினை குறிப்பிடுக.


19. M.T. VICTORY GRT 23500, NRT 13500. Deadweight 37000, has arrived Nagapattinam Port anchorage on 01.04.2017. Vessel berthed at CPCL Jetty on 01.06.2017. Loaded Cargo of High Speed Diesel 12001.8 Metric Tonnes and taken Fresh Water of 150 Metric Tonnes supplied through 15 lorries entering into port premises. Subsequently Vessel unberthed and sailed on 03.06.2017 at 1200 hrs. For issuing Port Clearance to the vessel on 03.06.2017 (Saturday) Port Conservator, Typist and Watchman worked from 0600 to 1200 hours. Calculate the Revenue collected at the Port Office Nagapattinam pertaining to such vessel.

எம்.டி.விக்டரி, பதிவு செய்யப்பட்ட மொத்த எடை 23500, பதிவு செய்யப்பட்ட நிகர எடை 13500, கப்பலின் நிறை பார எடை 37000 கொண்ட கப்பல் நாகப்பட்டினம் துறைமுகம் வந்தடைந்து 01.04.2017 அன்று நங்கூரம் பாய்ச்சப்பட்டது. 01.06.2017 அன்று CPCL Jetty ல் கப்பல் அணைந்தது. உயர் வேக டீசல் 12001.8 மெட்ரிக் டன்கள் மற்றும் புதிதாக எடுக்கப்பட்ட தண்ணீர் 150 மெட்ரிக் டன்கள், விநியோகம் செய்வதற்காக 15 லாரிகள் துறைமுக வளாகத்திற்குள் வந்து சேர்ந்தன. கப்பல் 03.06.2017 அன்று 1200 மணியளவில் துறைமுகத்திலிருந்து வெளியேறியது. 03.06.2017 அன்று (சனிக்கிழமை) வந்த கப்பலுக்கான துறைமுக அனுமதி வழங்குவதற்காக துறைமுகப் பாதுகாப்பாளர், தட்டச்சர் மற்றும் காவலர் 0600 முதல் 1200 மணி வரை பணியாற்றியுள்ளனர். அக்கப்பலுக்காக நாகப்பட்டினம் துறைமுக அலுவலகத்தால் பெறப்பட்ட வருவாயைக் கணக்கிடுக.

20. A company has been allotted with a coastal land of length 54 metres and width 45 metres for construction of a self-propelled barge for his own purposes for a period of one year from 01.04.2017 by executing a license agreement under form 26, within Rameswaram Port Limits. They have constructed a Self-Propelled Barge with specifications GRT 450, NRT 220, DWT 600 and launched within such period. Registered under Merchant Shipping Act 1958 by Principal Officer, Mercantile Marine Department, Chennai. The Self-Propelled Barge loaded River Sand of 498.5 Metric Tonnes and sailed to Cuddalore Port and discharge the cargo subsequently. Calculate the revenue to Tamil Nadu Maritime Board.

ஒரு நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட கடற்கரை நிலம் 54 மீட்டர் நீளம் மற்றும் 45 மீட்டர் அகலத்தில் சுய இயந்திரத்தில் இயங்கும் கலன் கட்டுவதற்காக 01.04.2017 முதல் ஒரு வருடத்திற்கு அவர்களது சொந்த பயன்பாட்டிற்காக, இராமேசுவரம் துறைமுகத்தின் எல்லைக்குள் உரிம ஒப்பந்தம் படிவம் 26ன்படி நிறைவேற்றப்பட்டது. பதிவு செய்யப்பட்ட மொத்த எடை 450, பதிவு செய்யப்பட்ட நிகர எடை 220, கப்பலின் நிறைபார எடை 600 கொண்ட, அவர்களது சுய இயந்திரத்தில் இயங்கும் கலன் கட்டப்பட்டு, கடலில் செலுத்தப்பட்டது. வணிக கப்பல் சட்டம் 1958ன்படி பதிவு செய்யப்பட்ட தலைமை அலுவலர், வணிக கடல் துறை, சென்னை அக்கப்பலை பதிவு செய்தார். சுய இயந்திரத்தில் இயங்கும் கலனில் 498.5 மெட்ரிக் டன் நதி மண்ணால் நிரப்பப்பட்டு, கடலூர் துறைமுகம் சென்று, சரக்கு அங்கு இறக்கப்பட்டது. இதில் தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கான வருவாயினை கணக்கிடுக.

SIGNALS HOISTED AT KATTUPALLI PORT




Q.No. 2

---